**இணைப்பு – 01**

# “ஜன சபை”

அரச கொள்கைகளை வகுப்பதில் கலந்துகொள்ளல் உடனான சனநாயகத்தை பலப்படுத்துவதற்கான ஜன சபையை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் தொடர்பான முன்மொழிவுகள்



**நீதி நியாயமிக்க சமுதாயத்திற்கான தேசிய இயக்கம்**

நீதி நியாயமிக்க சமுதாயத்திற்கான தேசிய இயக்கத்தினால் ஏற்கனவே மான்புமிகு சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜன சபை தொடர்பான அடிப்படை கோட்பாட்டு ஆவணத்தை அடிப்படையாகக்கொண்டு கடந்த சில வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட புத்தி ஜீவிகளின் கலந்துரையாடல்களை அடிப்படையாகக்கொண்டு மேம்படுத்தப்பட்ட ஓர் ஆவணமாக இந்தப் பத்திரம் சமர்ப்பிக்கப்படுகின்றது. இதனூடாக மிகவும் துரிதமாக ஜன சபை முறையை ஸ்தாபித்தல் தொடர்பாக மிகவும் செயன்முறை ரீதியிலான கருத்து முன் வைக்கப்பட்டிருப்பதுடன், இந்த கருத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதன் மூலம் அரச கொள்கை வகுத்தலுக்கு பொதுமக்களின் நேரடியான கலந்துகொள்ளலை உறுதிப்படுத்திக்கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

## 1. முன்னுரை

இலங்கையில் பாராளுமன்றம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன கட்டமைப்புகள் பிரதிநிதித்துவ மூலமான சனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கும் பிரதிநிதித்துவ சனநாயம் ஊடாக மக்களின் இறைமையை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறுவப்பட்டுள்ளன. இந்த கட்டமைப்புகளுக்கு மேலதிகமாக மக்களின் நேரடி கலந்துகொள்ளலை உறுதிப்படுத்தும் கலந்துகொள்ளல் உடனான சனநாயக மாதிரி ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தும் கலந்துரையாடல்கள் அண்மை காலமாக இடம்பெற்று வந்தன. இங்கு பிரதானமாக கிராமம் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கையில் பரிதியில் உள்ள மக்களின் கலந்துகொள்ளல் உடனான சனநாயகத்தை உறுதிப்படுத்தும் மறுசீரமைப்புகள் தொடர்பாக சுதந்திரத்தின் பின்னர் பல வருடங்களாக பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளன. இது தொடர்பாக பல்வேறு ஆய்வுகள், பல்வேறு பரீட்சார்த்த நடவடிக்கைகள் முயற்சிகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. ஜன சபைகள் அதாவது மக்கள் கௌவுன்சில் தொடர்பாக ஊடகங்களும் பொதுமக்களும் மீண்டும் கவனம் செலுத்த தொடங்கின. 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த ஜன சபை முறை தொடர்பாக கலந்துரையாடும்போது இலங்கையின் வரலாற்றுக் கால கிராம சபை முறை மற்றும் அதன் பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த உள்ளூராட்சி கட்டமைப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கையில் கிராம சபை முறையின் வரலாறு பண்டுகாபய மன்னரின் காலம் வரை பின்னோக்கிச் செல்கின்றதாக வரலாற்று ஆவணங்களை பரிசீலிக்கும்போது அறிய முடிகின்றது. சுமார் 2000 ஆண்டுகால வரலாற்றுடன் தொடர்ந்து வந்த கிராம சபை முறை தொடர்பாக கற்கைகளை மேற்கொண்ட கலாநிதி மாலினி ஏந்தாகம குறிப்பிடும் விதத்தில் மிகவும் முன்னேற்றமடைந்த கலாசாரம் ஒன்றின் பண்புகளை உள்ளடக்கிய முறையான கிராம சபை முறையொன்று இலங்கை வரலாற்றில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். நாட்டின் நிர்வாக கட்டமைப்பிற்குள் இந்த கிராம சபை முறையானது மிகவும் விரிவான வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைமுறையில் இருந்ததை வரலாற்றுகால கல்வெட்டுகள் உறுதிப்படுத்தியுள்ளன. 1955இல் உள்ளூராட்சி தொடர்பாக நியமிக்கப்பட்ட சொக்கி ஆணைக்குழுவின் அறிக்கை மூலமும் இந்த விடயம் தொடர்பாக மேலதிகமாக கூறப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் இந்த கிராம சபை முறை நடைமுறையில் இருந்தமை உதாரணங்களுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஊவா மாகாணத்தின் தொம்பகஹவெல, றுகுனு தேசிய வன விலங்குகள் பூங்கா, குருணாகல் மாவட்டத்தில் உள்ள பொல்பித்திகம, பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள தம்மன்கடுவ மற்றும் ஹொரவப்பொத்தான போன்ற நாட்டின்

பல்வேறு பகுதிகளில் இது தொடர்பான கல்வெட்டுகள் இருந்தமை ஆதாரங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.[1]

இலங்கையில் நடைமுறையில் இருந்த கிராம சபை முறை நேரடியாக மக்களின் கலந்துகொள்ளலை பெற்றிருந்த ஓர் முறையாகும். எனினும் அந்த கட்டமைப்புக்குள் சமூக உடன்பாடுகள் காணப்பட்டபோதிலும் மிகவும் விரிவான முறையிலான ஓர் சனநாயகம் நடைமுறையில் இருக்கவில்லை என்று இந்த வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. விசேடமாக பிரபுத்துவ வர்க்கத்தினரின் செயற்பாடுகள் அந்த கட்டமைப்புக்குள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி இருந்ததாக சாட்சிகள் பகிர்கின்றன. இதனால் பெண்கள், யுவதிகள் போன்றோர் இனம் மற்றும் சாதி என்ற பாகுபாடுகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததன் மூலம் அவர்கள் அனைவரும் தொடர்பாக பாரபட்சமற்ற முறையில் நீதி நியாயமான வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்ற கேள்விக்குறியும் எழுந்துள்ளது. பிரிட்டிஸ் ஆட்சியாளர்களின் காலத்தில் இலங்கையில் இருந்த கிராம சபை முறைக்குப் பதிலாக உள்ளூராட்சி கட்டமைப்பாக கிராம சபை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அதனை அடுத்து படிப்படியாக மாநகர சபைகள் மற்றும் சுகாதார பாதுகாப்புக்கான சபைகள், பட்டினச் சபைகள் போன்ற உள்ளூராட்சி சபைகளும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

1947ஆம் ஆண்டின் பின்னர் கூட உள்ளூராட்சி முறைக்குள் கலந்துகொள்ளல் உடனான சனநாயகத்தை மேலும் உறுதிப்படுத்தல் உள்ளூராட்சி முறைக்குள் நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இது தொடர்பாக 1955ஆம் ஆண்டு சொக்ஸி குழு அறிக்கை, 1968ஆம் ஆண்டின் ஜயசூரிய குழு அறிக்கை, 1970ஆம் ஆண்டு சிற்றம்பலம் குழு அறிக்கை, 1979ஆம் ஆண்டு மொரகொட குழு அறிக்கை, 1980ஆம் ஆண்டு விக்டர் தென்னகோன் குழு அறிக்கை, 1986ஆம் ஆண்டு எச்.ஏ.பி.அபேவர்தன குழு அறிக்கை என்பவற்றை ஆராய்வதன் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று வரலாற்றுக்கால கிராம சபை முறை பிரிட்டிஸ் காலத்து மற்றும் சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்தின் உள்ளூராட்சி முறை என்பவற்றை ஆராய்ந்து இலங்கையின் உள்ளூராட்சி மறுசீரமைப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 1999ஆம் ஆண்டுக்கான சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் கலந்துகொள்ளல் உடனான சனநாயகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் முக்கியத்துவம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

[1] *உள்ளூராட்சி தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை – 1955 (சொக்ஸி ஆணைக்குழு அறிக்கை அதன் முதலாம் இரண்டாம் பக்கங்களில் காட்டப்பட்டுள்ள இலங்கையின் சனநாயகம் மற்றும் பண்முகப்படுத்தப்பட்ட நிர்வாகம் - லீட்டன் ட்ரேஸி ஜி.ஆர்.1979*

இவற்றுள் கலந்துகொள்ளல் உடனான சனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட மிகவும் முக்கியமான முயற்சி யாதெனில் 1981ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை முறையை அறிமுகப்படுத்திய மாவட்ட அபிவிருத்தி சபை சட்டமாகும். இந்த சட்டத்தின் 17ஆவது பிரிவின்படி கிராமோதய சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அடிமட்டத்தில் மக்களின் கலந்துகொள்ளலை அதிகரித்துக் கொள்வதற்காக அபிவிருத்தி சபைகளுக்கு மேலதிகமாக பிரதேச சபைகள் மற்றும் கிராமோதய சபைகள் நிறுவப்பட்டன.[2]

அதேபோன்று 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசியல் யாப்பு மறுசீரமைப்பு தொடர்பாக மக்கள் கருத்துக்களை கேட்டறியும் குழு அறிக்கையின் மூலமும் கிராம அரசுகள் / கிராமசபை கோட்பாடு தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளன. அந்த குழு அறிக்கையின் 10.1.2இன் கீழ் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம மட்டத்திலான நிர்வாக பலவீனங்களை தவிர்த்துக்கொள்ளக்கூடிய வகையிலும் சனநாயக அரசியல் கட்டமைப்புக்குள் பிரசைகளின் நேரடி கலந்துகொள்ளலை அதிகரித்துக்கொள்வதையும் உறுதிப்படுத்தும் வகையில் கிராம மட்டத்தில் அதிகாரங்களை வழங்கும் அவசியம் காணப்படுவதாக கூறப்பட்டுள்ளது. கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான நோக்கங்களை அடைவதற்கும் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பிரசைகளின் நேரடிக் கலந்துகொள்ளலை பெற்றுக்கொண்டு கிராம மட்டத்திலான நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்யும் பொருட்டு சுயமாக நிர்வகிக்கப்படும் நிறுவன பொறிமுறை ஒன்றை சட்டப்படி ஸ்தாபிப்பது உத்தேச கட்டமைப்பின் நோக்கமாகும். அனைத்து மட்டங்களிலும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் தமது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு ஏதுவாக உள்ள கட்சி அரசியல், ஊழல் மற்றும் பிரதேச அரசியலில் காணப்படும் தீவிர அரசியல் மயப்படுத்தல் மற்றும் அதிகாரிகளின் வாதம் போன்றவற்றினால் இவ்வாறான புதிய அரசியல் கட்டமைப்பொன்று தேவைப்படுகின்றது.[3]

இந்தக் குழு அறிக்கை மூலம் கிராம சபை தொடர்பான பிரதான கோட்பாடுகள் கலந்துரையாடப்பட்டுள்ளன. அதாவது கிராம மட்டத்தில் சமூக அமைப்பு அங்கத்தவர்களின் கிராம அரசுகள் அதற்கான பதிலீடுகள் தொடர்பான கோட்பாடுகள் அதிகாரப் பரவல் இரண்டாவது படிமுறையாக உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் கிராம சபைகள் அவை தொடர்பான அடிப்படை கோட்பாடுகள் என்பவற்றுக்கு அப்பால் சென்று நேர்மையான பிரசைகளுக்கான சனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான கோட்பாடுகள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

---

[2] *இலங்கை சமுதாயத்தில் கலந்துகொள்ளல் உடனான சனநாயகத்தை நோக்கி உள்ளூராட்சி முறை தொடர்பான ஓர் பகுப்பாய்வு – சொப்மென் இவோன் - 2011*

[3] *அரசியல் யாப்பு மறுசீரமைப்புத் தொடர்பான மக்களின் கருத்துக்களை கேட்டறியும் குழு அறிக்கை – 2016 லால் விஜேநாயக்க குழு அறிக்கை.*

மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி இலங்கையில் தற்போது உள்ள உள்ளூராட்சி முறைக்குள் கலந்துகொள்ளல் உடனான சனநாயக முறை தொடர்பாக நிலவும் குறைபாடுகளை கலைவதற்கும் வரலாற்று கால கிராம சபைகளைவிட பெரிதும் முன்னேற்றகரமான பண்புகளுடன் நிலைநாட்டப்பட வேண்டிய கலந்துகொள்ளல் உடனான சனநாயகத்தை மேலும் பலப்படுத்தும் ஓர் புதிய முறையாக இந்த கோட்பாட்டு ஆவணம் மூலம் கிராம சபை முறை முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராமத்தில் விரிவான கலந்துகொள்ளல் உடனான சனநாயக முறையொன்றை உறுதிப்படுத்துவதற்கும் பரிதியில் உள்ள மக்களுக்கு ஆட்சி நிர்வாக நடவடிக்கைக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும். அதேபோன்று இதனூடாக தேசிய மட்டத்திலான கலந்துகொள்ளல் உடனான சனநாயகத்தை உறுதிப்படுத்தும் தற்போதுள்ள சட்டவாக்க துறைக்கு அவதானிப்புகளையும் மக்கள் கருத்துக்களையும் வழங்கும் சபையாக செயற்படக்கூடியவாறான புதிய கட்டமைப்பு முன்மொழியப்பட்டுள்ளது. அதேபோன்று அனைவரும் தொடர்பாக பாராபட்சமற்ற வகையில் செயற்படுதல். இனம், மதம், சாதி என்ற காரணிகளின் அடிப்படையில் எவரும் புறந்தள்ளப்ப்படாத போதுமானளவிலான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் பிரபுத்துவ செயற்பாட்டினால் எவருக்கேனும் கிடைக்கவுள்ள வாய்ப்புகள் இல்லாமல் போவதை தடுப்பதற்கும் இந்த யோசனையின் ஊடாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று இளைஞர்கள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை போதுமானளவில் உறுதிப்படுத்துவதற்கும் இந்த கோட்பாட்டு ஆவணத்தில் மேலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## 2. ஜன சபைகள் யாருக்காக?

ஜன சபைகள் இந்நாட்டில் வாழும் அனைத்து இலங்கையர்களுக்கும் ஆகும். விசேடமாக பரிதியில் இருந்து பெரிதும் தொலைவில் உள்ள கிராமங்களில் வாழும் மக்களின் குரலை ஆட்சி நிர்வாகத்தில் உள்வாங்கக்கூடிய வகையில் அதன் கீழ் ஓர் நேரடியான தலையீடு உருவாகும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அதேபோன்று, அனைத்து கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளிலும் அரச கொள்கைகளின் அடிப்படையில் சனநாயகத்தின் அரசாட்சி முறையை நடைமுறைப்படுத்தும்போது அதற்காக நேரடியான மக்கள் பிரசைகளின் கலந்துகொள்ளலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு இது பெரும் உந்துசக்தியாக அமையும். அதேபோன்று கொள்கை ரிதியான விடயங்ள் தொடர்பாக மக்களை அனைத்து சந்தரப்பஙிகளில் விழிப்புடன் வைக்கும் ஒரு பொறிமுறையாகவம் இது நடைமுறையில் இருக்கும். மக்களின் நேரடி கலந்துகொள்ளல் மூலம் கிராமத்து பிரச்சினைகள் மற்றும் கிராமத்துடன் தொடர்பான அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தேசிய மட்டத்தில் கொள்கை வகுத்தல்களுக்கு மக்களின் கருத்துக்களை நேரடியாக பெற்றுக்கொள்வதற்கும் இதன்கீழ் ஓர் பொறிமுறை உருவாகும் என்பது எமது நம்பிக்கை ஆகும்.

## 3. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நீதி நியாயமான தன்மை

தற்போது பிரதிநிதித்துவம் மூலமான சனநாயகம் நடைமுறையில் இருக்கும் சில அதிகார கட்டமைப்புகள் காணப்படும் பின்னணியில் இவ்வாறான மேலும் ஓர் கலந்துகொள்ளலுடன் கூடிய கட்டமைப்பு எதற்காக தேவைப்படுகின்றது என்ற கேள்வியை சில தரப்பினர் முன்வைத்துள்ளனர். எனினும் அண்மைக்கால மக்கள் எழுச்சிகளின்போது முன்வைக்கப்பட்ட ஓர் பிரதான கோரிக்கை பிரதிநிதித்துவ சனநாயக கட்டமைப்புகளுக்கு அமைவாக செயற்படக்கூடிய மக்களின் உண்மையான குரலுக்கு ஓர் மேடையாக விளங்கக்கூடிய மக்கள் கலந்துகொள்ளலுடனான சனநாயக கட்டமைப்பொன்று தேவை என்ற குரல் ஓங்கி இருந்தது. அவ்வாறான ஒரு பின்னணியில் இந்த ஜன சபை என்ற கோட்பாடு அரச கொள்கைகளை வகுப்பதற்காக பயன்படுத்திக்கொள்வதற்கும் அந்த கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது அதில் பிரசைகளின் கலந்துகொள்ளலை பெற்றுக்கொள்வதன் மூலம் அந்த கொள்கைகளை வெற்றியடைய செய்வதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது இதன் நோக்கமாகும்.

## 4. நோக்குகை

முன்னேற்றகரமான கலந்துகொள்ளலுடனான சனநாயகத்தின் மூலம் நிலைபேறான அரசொன்றை உருவாக்குதல்.

## 5. பணி

தெற்காசியாவில் மிகவும் நேரடியான கலந்துகொள்ளலுடன் கூடிய ஓர் சனநாயக மாதிரியாக மக்கள் சபை முறையை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையில் அரச கொள்கைகளை வகுத்தல் உட்பட சனநாயக கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் மிகவும் சிறந்த முறையிலான பிரசைகளின் கலந்துகொள்ளலை உறுதிப்படுத்துவதன் மூலம் 2030ஆம் ஆண்டாகும்போது மிகவும் முன்னேற்றகரமான, உணர்வுபூர்வமான பிரசைகளை உள்ளடக்கிய நிலைபேறான அரசொன்றை உருவாக்க பங்களிப்பு வழங்குதல்.

## 6. இலக்கு

01. பரிதியில் உள்ள மக்கள் கருத்துக்களை தீர்மானம் எடுக்கும் கேந்திர நிலையத்தின் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புபடுத்தல்.
02. அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது பொதுமக்களின் நேரடி கலந்துகொள்ளலை உறுதிப்படுத்தல்.
03. கொள்கை வகுத்தல் செயற்பாட்டினால் பங்களிப்பு வழங்கும் முன்னேற்றகரமான பிரசைகளை கட்டியெழுப்புதல்.
04. பிரசைகளின் நேரடி கலந்துகொள்ளல் மூலம் அதிகாரவாதத்தின் செயற்திறனின்மை மற்றும் அரசியல் அதிகாரத்தின் தலையீட்டினால் இடம்பெறும் ஊழல்கள் மற்றும் மோசடிகளை இல்லாமல் செய்தல்.
05. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும்போது அதில் மக்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல்.
06. தற்போதுள்ள சனநாயக கட்டமைப்பின் மாதிரி செயற்திறனின்மையை நேரடியான பிரசைகளின் கலந்துகொள்ளல் மூலம் சீர்செய்வதற்காக மிகவும் முன்னேற்றகரமான கூர்மையான மக்களின் கலந்துகொள்ளலுடன் கூடிய ஓர் கட்டமைப்பாக ஜன சபைகளை கட்டியெழுப்புதல்.

## 7. இந்த கருத்திட்டங்கள் மூலம் முன்வைக்கப்படும் அடிப்படை விடயங்கள்

1. தேசிய ஜன சபை செயலகம்
2. கிராமிய ஜன சபை
3. பிரதேச ஜன சபை முகாமைத்துவக்குழு
4. தேசிய ஜன சபை

## 8. தேசிய மக்கள் சபை செயலகம்

- தேசிய ஜன சபை செயலகமானது மக்கள் சபைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்தல், மேம்படுத்தல் போன்றவை தொடர்பாக பொறுப்புக் கூறும் முக்கிய நிறுவனமாகும்.

- முழுமையாக ஓர் சுயாதீனமான நிறுவனமாக நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

- இந்த நிறுவனம் மூலம் பாராளுமன்றத்திற்கும் சனாதிபதி செயலகத்திற்கும் இடையில் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

- சகல கிராமிய சபைகளின் செயலாளர்களை கண்காணித்தல், மேற்பார்வை மற்றும் பயிற்சி தொடர்பாக பொறுப்பு கூறும் நிறுவனமாகும்.

- இந்த நிறுவனம் தொடர்பான மேலதிக விபரங்கள் இந்த ஆவணத்தின் இறுதியில் கூறப்பட்டுள்ளது.

## 9. கிராமிய ஜன சபைகள்

### நோக்கம்

கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வாழும் மக்களுக்கு ஒன்றிணைந்து தமது கிராமத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கான வாய்ப்பினை வழங்குதல் கிராமிய ஜன சபைகள் உறுவாக்கப்பட்டமையின் அடிப்படை நோக்கமாகும்.

### தன்மை

அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வீதம் கிராமச் சபைகளை நிறுவுவதற்கும், யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்படி குறைந்தபட்சம் 500 குடும்பங்களுக்கு ஓர் ஜன சபை மூலம் ஏற்படுத்துவதற்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைக்கின்றது.

இதன்படி அண்ணளவாக 14022 மக்கள் சபைகளை நிறுவ நேரிடும். எனினும் கொழும்பு உட்பட மக்கள் நெரிசல் உள்ள பகுதிகளில் அதிகளவிலான குடும்பங்கள் இருக்கும்போது பொருத்தமானவாறு ஒன்றுக்கும் மேற்பட்ட ஜன சபைகளை நிறுவ முடியும்.

அவ்வாறு ஓர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒன்றுக்கு மேற்பட்ட சபைகளை நிறுவும்போது இதுதொடர்பாக பிரதேச செயலாளர்களின் சிபாரிசுகளை கருத்திற்கொண்டு குறிப்பிட்ட சபைகளின் எண்ணிக்கையை தீர்மானிக்கும் அதிகாரம் தேசிய ஜன சபை செயலகத்திற்கு வழங்குவதற்கு இதன் மூலம் முன்மொழியப்படுகின்றது.

அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் ஜன சபைகளை முன்னெடுப்பதற்காக ஜன சபை செயலாளர் ஒருவர் வீதம் இருத்தல் வேண்டும். இதற்காக அரசினால் தற்போது சேர்க்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க முடியும். அந்த உத்தியோகத்தர் பிரதேச செயலகத்தின் கீழ் பணியாற்றுகின்ற போதிலும் ஜன சபை செயலகத்துக்கு பொறுப்பு கூறும் உத்தியோகத்தராக விளங்க வேண்டும். அவர் தேசிய ஜன சபையின் செயலாளருக்கு பொறுப்பு கூறுதல் வேண்டும்.

**<u>ஒழுங்கமைப்பு மற்றும் தெரிவு செய்தல்</u>**

கிராமிய ஜன சபைகளுக்கு பிரிவில் வாழும் 16 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கலந்துகொள்ள முடியும். அவ்வாறு நடத்தப்படும் கிராமிய மக்கள் சபையின் முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தின் போது தலைவர் ஒருவரும் செயற்குழுவொன்றும் நியமிக்கப்படல் வேண்டும்.

தலைவர் பதவிக்கு முடிந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் பெண் ஒருவர் அல்லது இளைஞர் ஒருவர் நியமிக்கப்படுவது ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

தலைவர் பதவிக்கு எவரேனும் ஒருவர் அடுத்தடுத்து வரும் இரண்டு வருடங்களுக்கு நியமிக்கப்படுதல் கூடாது. ஒருதரம் நியமிக்கப்பட்ட ஒருவர் 2 வருடங்களுக்கு பின்னரே மீண்டும் போட்டியிட முடியும்.

தலைவர் பதவிக்கு ஏகமனதாக தெரிவு இடம்பெறாத சந்தர்ப்பத்தில் முன்வைக்கப்படும் வேட்பு மனுக்களை அடிப்படையாகக் கொண்டு சீட்டிழுப்பின் மூலம் தலைவர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

செயற்குழுவுக்காக ஆகக் கூடியது 25 பேர் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். அல்லது தெரிவு செய்யப்படுதல் பொதுச் சபையின் மூலம் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டு இணக்கப்பாட்டுடன் தெரிவு செய்யப்படல் வேண்டும். அதேபோன்று செயற்குழுவுக்காக மக்களில் இருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களில் 30% குறைந்தபட்சம் பெண்களாக இருத்தல் வேண்டும். 25%த்தினர் இளைஞர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட பிரிவில் பல்வேறு இனத்தவர்கள், மதத்தவர்கள் இருப்பின் அவர்கள் மத்தியிலிருந்து குறிப்பிட்ட சதவீதத்தினர் பிரதிநிதிகளாக செயற்குழுவுக்கு தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன், இது தொடர்பாக ஜன சபை செயலாளர் பொதுச் சபையுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தலைவர் உட்பட நியமிக்கப்படும் செயற்குழு உறுப்பினர்கள் தொண்டர் அடிப்படையில் செயற்படுதல் வேண்டும். சபையின் உத்தியோகபூர்வ காலம் ஒரு வருடமாகும். அந்த கால எல்லைக்குள் அவசர நிலைமையின்போது மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு பொதுச் சபையை கூட்ட வேண்டும்.

செயற்குழுவுக்காக மக்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் 25 பேருக்கு மேலதிகமாக பிரிவில் உள்ள அனைத்து அரச உத்தியோகத்தர்களும் செயற்குழுவின் அங்கத்தவர்கள் ஆவர். எனினும் அவர்களுக்கு ஆலோசனை மாத்திரமே வழங்க முடியும். எந்தவோர் முன்மொழிவுகள் தொடர்பாக வாக்குரிமைகள் கிடையாது.

அதேபோன்று மக்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் 25 பேரில் உள்ளடங்காத எனினும் சுயமாக கிராமத்தில் தொண்டர் சேவைகளில் ஈடுபடும் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் தலைவர் பதவியை வகிப்பவர்களுக்கு செயற்குழுவில் அங்கத்துவம் வழங்க முடியும். எனினும் அரசுடன் ஒப்பந்த வேலைகளுக்கான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் சங்கங்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படக் கூடாது.

ஜன சபை இந்த எடுகோள்களுக்கமைய நியமிக்கப்படாத சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக பிரதேச செயலாளருக்கு மற்றும் தேசிய ஜன சபை செயலகத்துக்கு முறைப்பாடு செய்தல் வேண்டும். அதன்போது குறிப்பிட்ட ஜன சபையின் செயலாளர் இதற்கு பொறுப்பு கூறல் வேண்டும்.

**<u>பணிகள்</u>**

கிராமத்துக்குரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக பரிந்துரைகளையும் முன்மொழிவுகளையும் மாகாண மற்றும் மத்திய அரசுக்கு வழங்குவதும் உள்ளூராட்சிமன்ற செயற்பாடுகளுக்காக மக்களின் பங்களிப்பினை வழங்குதல் அரசின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது மக்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பிரதேச அபிவிருத்தி குழுக்களுக்கு யோசனைகளை முன்வைத்தல் என்பன இந்த ஜன் சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட பிரதான பணிகளாகும்.

**<u>அதிகாரங்கள்</u>**

கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர்பில் அரசின் அனைத்து கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தும்போது குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் செயற்குழுவின் கருத்துக்களை கேட்டறிய வேண்டும் என்பதுடன் யோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏதேனுமோர் அவசர நிலைமையின்போது அல்லது ஓர் முக்கியமான சந்தர்ப்பத்தில் முக்கியமான தீர்மானமொன்றை எடுக்க நேரிடும்போது அவசரமாக பொதுச் சபையைக் கூட்டி அதன் கருத்துக்களையும் பெற்று நடைமுறைப்படுத்த வேண்டும். (உதாரணமாக பிரிவுக்குள் அபிவிருத்தி நடவடிக்கையின் போது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக ஜன சபையின் கருத்துக்கள் பெறப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் அதேபோன்று அந்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது அவற்றின் தரம் தொடர்பாக ஜன சபை அவதானித்தல் வேண்டும்.

இந்த சபைக்கு சட்டப்படி நிதி அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது. இந்த சபைக்கு அரசின் அல்லது பிரதேசத்தின் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த வேலைகளைப் பெற்று பணம் சம்பாதித்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட முடியாது.

எனினும் இலாபமீட்டும் நோக்கம் அல்லாமல், அவசர விடயங்கள், உபசரிப்புகள் மற்றும் விழாக்களுக்கான செலவுகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கு சபைக்கான நிதியொன்றை பேண முடியும். அதன் பொறுப்பு செயற்குழுவினால் நியமிக்கப்படும் நிதிக்குழுவினால் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று குறிப்பிட்ட பிரிவுக்கான அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் தோன்றும் போது குறிப்பிட்ட பிரிவின் செயற்குழுவினை பிரதிநிதித்துவம்படுத்தி அதன் உறுப்பினர்களுக்கு பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ள மற்றும் அதன் தீர்மானங்கள் சம்பந்தமாக அவதானிப்புக்களை வழங்குவதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும்.

ஜன சபைக்காக செயற்குழு உறுப்பினர்களுக்கு பிரதானமாக பின்வரும் விடயங்கள் தொடர்பாக துணைக் குழுக்களை நிறுவ முடியும். அது தொடர்பாக அக்கறை செலுத்தும் மக்களை அதில் இணைத்துக்கொள்ள முடியும்.

> அனர்த்த முகாமைத்துவம், கிராமிய விளையாட்டுக்கள் கலாசார நிகழ்ச்சிகள், கிராமிய விவசாயம் கால்நடை வளர்ப்பு, கிராமிய கைத்தொழில், பிரதேசத்தின் நீர் மூலங்களை பாதுகாத்தல், கிராமிய காடுகள் அவற்றின் பாதுகாப்பு, இணக்கச்சபை போன்ற நடவடிக்கைகள் கிராமிய நிர்வாக உதவியாளர் பணிகள், சிவில் பாதுகாப்பு, (சிவில் பாதுகாப்பு குழு நடவடிக்கைகள்) கிராமிய உணவு பாதுகாப்பு மற்றும் பிரதேசத்துக்கு பொருத்தமானதென கருதும் வேறு விடயங்கள்.

**<u>வேறு விடயங்கள்</u>**

எந்தவோர் காரணம் கொண்டும் கட்சி அரசியல் இதில் இடம்பெறக்கூடாது என்பதுடன், சுயாதீனமாக முன்னெடுத்தல், தெரிவு செய்தல் என்பன இடம்பெறுதல் வேண்டும். அரசியல் கட்சி செல்வாக்கினால் மற்றும் கிராமிய பிரபுத்துவ மேட்டுக் குடியினரின் அழுத்தங்கள் இல்லாமல் சகல தரப்பினருக்கும் நியாயமான கலந்துகொள்ளலை உறுதிப்படுத்துவதற்காக கிராமிய மக்கள் சபை செயலாளரினால் குறிப்பிட்ட எடுகோள்களின் அடிப்படையில் செயற்படுதல் வேண்டும்.

அதேபோன்று தேசிய மட்டத்திலான கொள்கைத் தீர்மானங்கள் தொடர்பாக மக்கள் கருத்துக்களை கேட்டறியும் ஓர் சபை என்ற வகையில் தேவைக்கு அமைய இதனை பயன்படுத்த வேண்டும். (இதன்போது திரு.விக்டர் அய்வனின் தலைமையில் நடைபெறும் மறுசீரமைப்புக்கான தேசிய இயக்கம் போன்ற மக்கள் கருத்துக்கள் மீது கட்டியெழுப்பப்படும் தேசிய மட்டத்திலான கொள்கை ரீதியிலான கலந்துரையாடல்களுக்கு இடமளிக்கப்படும்.)

இந்த சபைகளுக்காக டிஜிட்டல் மயமாக்களை அடிப்படையாகக் கொண்ட நேர்த்தியான (SMART) தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், இதன்படி நேரடியாக E தொழில்நுட்பத்தின் ஊடாக மக்களின் மனுக்களை சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

அதேபோன்று சபைகளின் முன்னேற்றத்தை வேகமாக பரிசீலிக்க கூடிய வகையில் சபை நடவடிக்கைகள் தொடர்பான சகல தகவல்களையும் டிஜிட்டல் தொழல்நுட்பத்தின் ஊடாக அந்தந்த சபைகளின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள இதன் மூலம் வாய்ப்பு கிடைத்தல் வேண்டும்.

## <u>10. பிரதேச மக்கள் சபை முகாமைத்துவ குழுக்கள்</u>

- மாதத்துக்கு ஒரு தடவை பிரதேச செயலாளர் உட்பட அரச உத்தியோகத்தர்களுடன் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சகல மக்கள் சபைகளின் தலைவர்களினால் நடத்தப்படும் கூட்டமாகும். அவசர அனர்த்த நிலைகளின்போது மாதாந்த கூட்டங்களுக்கு மேலதிகமாக ஜன சபை பிரதிநிதிகளின் அவசரக் கூட்டங்களை கூட்டுவதற்கு பிரதேச செயலாளர்களால் இயலும். இந்த கூட்டங்களுக்கு பிரதேச செயலாளர் தலைமை வகித்தல் வேண்டும்.
- பிரதேச செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் திட்டமிடல் பணிப்பாளர் ஒருவரினால் கூட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- இந்த கூட்ட அறிக்கைகளை தேசிய ஜன சபை செயலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- அதேபோன்று அத்தியாவசியமான ஓர் விடயம் தொடர்பாக அவசர கூட்டங்களை ஒழுங்கு செய்யுமாறு ஜன சபை தலைவர்களுக்கு பிரதேச செயலாளரினால் வேண்டுகோள் விடுக்க முடியும்
- பிரதேச ஜன சபை முகாமைத்துவக் குழுவினால் மக்கள் சபைகளின் முன்னேற்றம் தொடர்பாக மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாட முடியும்.
- அந்தந்த ஜன சபைகள் தொடர்பாக தீர்க்கப்படாத பிரச்சினைகள் (அபிவிருத்தி மற்றும் கொள்கை ரீதியிலான) அந்தந்த விடயங்களின்படி மாகாண ஆளுநர்கள் / மாகாண

தலைமைச் செயலாளர்கள் அல்லது அமைச்சின் செயலாளர்கள் / மாவட்டச் செயலாளர்கள் / திணைக்கள அல்லது அரச நிறுவனத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்க இயலும் என்பதுடன் அதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது தீர்மானிக்கப்படல் வேண்டும்.

## 11. தேசிய ஜன சபை

**நோக்கம்**

பரிதியில் உள்ள மக்களை தேசிய கொள்கை வகுத்தலில் கலந்துகொள்ள செய்தல்.

**ஒழுங்கமைப்பு**

மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 100 ஆகும். கிராமிய ஜன சபை செயற்குழு உறுப்பினர்களில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அழைக்கப்படும் 75 பேர், மற்றும் தொழில் நிபுணத்துவ மட்டத்திலானவர்கள், சிவில் அமைப்பு செயற்பாட்டாளர்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் இருந்து திறமையின் அடிப்படையில் 25 பேர் இதில் உள்வாங்கப்பட வேண்டும்.

**கூட்டங்கள்**

ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு தடவை மாதத்தின் இறுதி வாரத்தில் கூட்டங்கள் நடைபெறும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அவசர நிலைமைகளின்போது விசேட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு கூட்டங்களை கூட்ட முடியும்.

**தெரிவு செய்தல்**

தலைவர்:- தேசிய ஜன சபையின் தலைவர் பதவி ஓர் கௌரவமான பதவியாக விளங்கும் என்பதுடன் அது பாராளுமன்ற அவையில் அவர்களுக்கு கிடைக்கும் வேட்பு மனுக்களின் அடிப்படையில் நியமனம் செய்யப்படும். அரசியல் யாப்பின் 22வது திருத்தத்தின் பின்னர் அது அரசியல் யாப்பு பேரவையினால் மேற்கொள்ளப்படும் 03 வருட காலத்துக்கு.

**ஏனைய உறுப்பினர்கள் 100 பேரும் நிரந்தரமான உறுப்பினர்கள் அல்ல. மாதத்துக்கு ஒரு தடவை பேசப்படும் விடயங்கள் தொடர்பாக அவர்கள் தெரிவு செய்யப்பட்டு அழைக்கப்படுவார்கள். மக்கள் ஜூரி சபை போன்றதாக விளங்கும்**.

**உதாரணம்**

1. சகல கிராம ஜன சபைகளின் செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு டிஜிட்டல் கட்டமைப்பின் கீழ் பதிவு செய்யப்படுவார்கள் என்பதுடன், அவர்களுக்கு நேர்த்தியான (smart) செயலிகள் மூலம் ஒவ்வொரு மாதத்தின் இறுதி வாரத்தில் மக்கள் சபையினால் கலந்துரையாடப்பட வேண்டிய தலைப்புக்கள் அனுப்பிவைக்கப்படும்.

2. அதன்போது தமது நிறுவனத்துக்கும் மற்றும் அக்கறை மூலம் அந்த தலைப்பு தொடர்பாக தனக்கு கருத்து தெரிவிக்க தேவை இருக்கின்றதா என்பது தொடர்பாக அவருக்கு குறிப்பிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. அது பிரதான தரவுகள் கட்டமைப்பில் குறிப்பிடப்படும் என்பதுடன் அவ்வாறு சந்தர்ப்பம் தருமாறு கேட்பவர்களிலிருந்து மாவட்ட அடிப்படையில் 70 பேர் அந்த மாதத்தில் ஜன சபையில் கலந்துகொள்ளும் பரிதியில் உள்ள மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுவார்கள்.

3. தொழில் அமைப்புக்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் மத்தியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அவர்களது நிபுணத்துவத்துக்கமைய வகைப்படுத்தப்பட்ட தரவுகள் கட்டமைப்பொன்று பேணப்படுவதுடன், இவர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யபபடும் 30 பேர் ஒவ்வொரு மாதமும் தேசிய ஜன சபையில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பினை பெறுவார்கள்.

**செயற்பாடு**

இந்த தேசிய மக்கள் சபையின் கூட்டறிக்கைகள் குறிப்பிட்ட விடயப் பொறுப்பு அமைச்சருக்கு மற்றும் துறைகள் மேற்பார்வை குழுக்களின் தலைவர்களுக்கு தேசிய ஜன சபையின் தலைவரினால் அனுப்பி வைக்கப்படும். அதன்படி கொள்கை வகுத்தலின்போது அவர்கள் அவற்றை கவனத்தில் கொள்வார்கள் என்பதுடன், பாராளுமன்றத்தில் சட்டவாக்க செயற்பாட்டில் அந்த கருத்துக்களுக்கு முக்கியமான இடம் வழங்கப்பட வேண்டும்.

## 12.தேசிய ஜன சபையின் தலைவர்

தேசிய ஜன சபையின் தலைவர் என்பது புரட்டோகோளுக்கு அமைய ஏற்படுத்தப்படும் ஓர் கௌரவப் பதவி ஆகும். இந்த தலைவர் பாராளுமன்ற அவையினால் (அரசியல் யாப்பின் 22வது திருத்தத்தின் பின்னர் அரசியல் யாப்பு சபையினால்) நியமிக்கப்படுவார்.

**<u>தலைவரின் கடமைகளும் பொறுப்புக்களும் அதிகாரங்களும்</u>**

(அ) தேசிய ஜன சபைக் கூட்டத்தை கூட்டுதல், அமர்வுகளை வழிநடத்தல், அமர்வுகளை சபையின் பிரேரணையின்படி ஒத்திவைத்தல்.

(ஆ) தேசிய ஜன சபைக்கு சமர்ப்பிக்கப்படும் மக்கள் மனுக்களை ஆராய்ந்து பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வருதல் தொடர்பாக கௌரவ சபாநாயகரின் கவனத்தக்கு கொண்டு வருதல்.

(இ) பாராளுமன்றத்தில் துறைசார் குழுக்கள் முறையை பலப்படுத்துவதற்காக தேவைக்கமைய தேசிய சபையுடன் தேவைப்படும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் துறைசார் குழுக்களுக்கு தேசிய மக்கள் சபையின் உறுப்பினர்களை தகுந்தவாறு தொடர்புபடுத்துவதற்கான நடவடிக்கையினை ஒருங்கிணைத்தல்.

(ஈ) தேசிய ஜன சபையின் முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அதில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தல்.

(உ) தேசிய மக்கள் சபையின் முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்களை உயர் பாராளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்காகச் சபாநாயகருக்கு அனுப்பிவைத்தல்.

(ஊ) பாராளுமன்றத்துக்கும் தேசிய ஜன சபைக்குமிடையில் சிறந்த உறவைப் பேணுதல்.

**13. தேசிய மக்கள் சபையின் பணிகளும் அதிகாரங்களும்**

(அ) பாராளுமன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மக்கள் இறைமையை மேலும் பலப்படுத்துவதற்காகக் கலந்துகொள்ளலுடனான சனநாயகத்தை வலுவூட்டும் ஓர்சபையாகவும் அதாவது மக்கள் ஜுரி சபையாகவும் செயற்படுதல்.

(ஆ) ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் ஒரு நாளாவது தேசிய ஜன சபையைக் கூட்டுதல் வேண்டும்.

(இ) ஊழல்களை ஒழித்தல், வெளிப்படைத்தன்மை, அரசதுறையில் உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறகைன மேம்படுத்துவதற்காகப் புதிய விடயங்களை முன்மொழிவதற்கும் மக்களுக்கு வாய்ப்பளித்தல்.

(ஈ) ஏதேனுமோர் விசேட காரணம் தொடர்பாக தேசிய ஜன சபையின் கருத்தினைக் கேட்டறிவதற்கு சனாதிபதிக்குத் தேவையேற்படும்போது அது தொடர்பாகத் தேசிய ஜன சபையின் தலைவருக்கு அறிவிப்பதையடுத்து ஜன சபையின் தலைவருக்கு சபையை அவசரமாகக் கூட்டுமாறு அறிவிக்க முடியும். இதற்கு மேலதிகமாகப் பாராளுமன்றத்தில்

அவசர சட்டமூலமொன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது இதுதொடர்பில் சபாநாயகரினால் தேசிய ஜன சபையின் தலைவருக்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பத்தில் அவசர அழைப்பினை விடுப்பதற்குத் தேசிய ஜன சபையின் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

(உ) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் விசேட சட்ட மூலங்கள் தொடர்பாக அவதானிப்புகளை வழங்குதல்.

(ஊ) பாராளுமன்றத்துக்கு புதிய சட்டமூலங்களுக்கான யோசனையினை முன்வைத்தல்.

(எ) பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய கேள்வியினை தலைவருடாக சபாநாயகருக்குச் சமர்ப்பித்தல்

(ஏ) வெளிநாட்டு உடன்படிக்கைகள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை தீர்மானங்கள் தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குதல்.

## 14. தேசிய ஜன் சபை செயலகம் தொடர்பான மேலதிக விளக்கம்

1. இதனை பூரணமான சுயாதீனமான நிறுவனமாக நிறுவ முன்மொழியப்படுகின்றது.

2. உத்தேச ஜன சபையை நிறுவுவதற்கு முன்னர் தேசிய ஜன சபை செயலகத்துக்கு அமைச்சரவை பத்திரம் மூலம் நிறுவுதல்.

3. பின்னர் ஜன சபை சட்டத்தின் மூலம் அந்த நிறுவனத்தை சட்டப்படியாக நிறுவ முன்மொழியப்படுகின்றது.

4. இதன்படி ஜன சபையை நிறுவ நடவடிக்கை எடுப்பதுடன், நிறுவப்பட்டதன் பின்னர் அவற்றின் பணிகள் முறையாக இடம்பெறுகின்றனவா என்பதை கண்காணித்தல், மேற்பார்வை செய்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலம் மேம்படுத்துவதற்கான யோசனையினை முன்வைத்தல், நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய ஒழுங்குப்படுத்தும் நடவடிக்கையினை ஒருங்கிணைத்தல்.

இதன்படி முதலாவதாக ஜன சபை செயலகத்தை நிறுவுதல் உத்தேச ஜன சபையினை நிறுவுவதற்கு முன்னர் துரிதமாக மேற்கொள்ளல் வேண்டும்.

## 15. தேசிய ஜன சபை செயலகத்தின் பணிகளும் அதிகாரங்களும்

I. ஜன சபைகளை நிறுவுவதற்கு முன்னர் அந்த சட்ட மூலத்தை தயாரிப்பதற்காக இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் உள்ளடங்களாக ஆரம்ப எடுகோள் ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தரப்புக்களுடன் மேலதிக கலந்துரையாடல்களை நடத்தி சட்டத்தை இயற்றுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல்

II. சட்ட மூலத்தை தயாரித்து அமைச்சரவை ஊடாக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதை அடுத்து ஜன சபை சட்டம் நிறைவேற்றத்தின் பின்னர் அந்த சட்டமூலங்களுக்கமைய ஜன சபைகளை ஏற்படுத்துவது தொடர்பான நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுத்தலும் தொடர்பினைத்தலும்.

III. ஜன சபைகள் நிறுவப்பட்டதன் பின்னர் அந்த சபைகளின் செயற்பாடுகள் முறையாக இடம்பெறுகின்றனவா என்பது தொடர்பாக ஆராய்தல், மீளாய்வு செய்தல், மேற்பார்வை செய்தல் மூலம் குறைபாடுகளை கலையும் வகையில் குறிப்பிட்ட துறைகளுக்கு கட்டளையிடல்.

IV. ஜன சபை முறையை பலப்படுத்துவதற்காக தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கையினை முன்னெடுத்தல்.

V. ஜன சபை முறையை முன்னெடுப்பதற்காக தேவையான வசதிகளை வழங்குதல் ஜன சபை முறையை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், அரசியல்மயப்படுத்தலை தவிர்த்தல் (கட்சி அரசியலிலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படுத்தல்) சுயாதீனத்தை பாதுகாத்தல், பிரபுத்துவ ஆதிக்கத்துக்கு உள்ளாவதை தடுத்தல் (அந்தந்த பிரதேசங்களில் உள்ள பிரபுவாதத்துக்கு உள்ளாவதை தடுத்தல்) தொடர்பான கட்டளையினை இடுதல்.

VI. சர்வதேச முகவர் நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு இந்த செயல்முறையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

VII. டிஜிட்டல் மயமாக்கல் மூலம் சபைகளின் நடவடிக்கைகளை மிகவும் செயற்திறன் மிக்கதாக மாற்ற தேவையான வசதியினை முன்மொழிதலும் அறிமுகப்படுத்தலும்.

VIII. தேசிய ஜன சபை செயலாளர்களுக்கு பயிற்சியளித்தலும் மேற்பார்வை செய்தலும் வழிநடத்தலும்.

IX. எதிர்வரும் காலங்களில் முன்வைக்கப்படும் சட்ட மூலங்கள் ஊடாக தேசிய மக்கள் சபையின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல்.

X. தேசிய ஜன் சபை நடவடிக்கைகளுக்கான நிர்வாக ஒத்துழைப்பினை வழங்குதல்.

**<u>தேசியன் சபை செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்படும் முன்னோடி கருத்திட்டங்கள்</u>**

ஜன சபை முறையை முறையாக நிறுவுவதற்காக ஜன சபை சட்டத்தை தயாரிப்பதற்கு முன்னராக இந்த எண்ணக்கருவிற்கான ஆவணத்தின் நடைமுறை ரீதியிலான பாவனை தொடர்பாக அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்காக முன்னோடி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சபை செயலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அதன்படி தெரிவு செய்யப்பட்ட 25 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 25 பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த கிராமிய மக்கள் சபை முறையை பரிட்சித்து பார்ப்பதற்காக முன்னோடிகளின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் பொருத்தமானதாகும். அந்த முன்னோடி கருத்திட்டங்களின் அனுபவத்தின் அடிப்படையில் இந்த ஆரம்ப எண்ணக்கரு தொடர்பான ஆவணத்தை தொடர்ந்தும் மேம்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது.

அதேபோன்று தேசிய ஜன சபையை கூட்டுதல், கிராமிய மக்கள் மத்தியிலிருந்து அங்கத்தவர்களை தெரிவு செய்தல் சம்பந்தமாக பரிட்சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை தேசிய மக்கள் சபை செயலகத்தினால் முன்னெடுக்க இயலும்.

## <u>16. சுருக்கம்</u>

ஜன சபைகள் தொடர்பாக நீதி நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தினால் தயார் செய்யப்பட்ட ஆரம்ப எண்ணக்கரு தொடர்பான ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தொழில் நிபுணர்கள் மற்றும் இது தொடர்பாக அக்கறை செலுத்தும் குழுக்களின் கலந்துகொள்ளலுடன் பல சுற்று பேச்சுவார்த்தையினை நடத்தி ஆரம்ப எண்ணக்கரு தொடர்பான இந்த ஆவணத்தை திருத்தியமைத்து இறுதியில் அனைவரினதும் கருத்துக்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் மிகவும் பயனுள்ளவாறான நடைமுறைக்கு சாத்தியமான ஓர் யோசனையாக இந்த ஆவணம் முன்வைக்கப்படுகின்றது. இதன் மூலம் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் ஜன சபைகளை நிறுவுவதற்கும் இதற்கான தலைவரையும், நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்களை கிராமத்தில் இருந்து தெரிவு செய்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. அதே போன்று மக்கள் மத்தியிலிருந்து நியமிக்கப்படும் செயற்குழு உறுப்பினர்கள் மத்தியிலிருந்து மகளிர், இளைஞர் போன்ற பிரதிநிதித்துவங்களும் உறுதிப்படுத்தப்படும் வகையில் இனம், மதம் என்ற

அடிப்படையில் பாகுபாடுகளுக்கு உள்ளாகாத வகையில் தேசிய ஜன சபையொன்றை ஏற்படுத்துவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு சபையை கூட்டும்போது 75%மான உறுப்பினர்களை கிராமிய செயற்குழு உறுப்பினர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்வதற்கும் மீதி 25%த்தை தொழில் நிபுணர்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் தேசிய மட்டத்திலான சிவில் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. இந்த தேசிய மக்கள் சபை மூலம் தேசிய மட்டத்திலான கொள்கைகளை வகுப்பதற்காக நேரடியாக மக்கள் கலந்துகொள்ளலை உறுதிப்படுத்த முடியும். இந்த தேசிய மக்கள் சபையின் கருத்துக்களை பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கும் அதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை தேசிய மக்கள் சபையின் தலைவர் ஊடாக மேற்கொள்ள முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மூலம் மிகவும் செயற்திறன்மிக்க மக்கள் கலந்துகொள்ளல் மூலம் நிலைபேறான அரச கொள்கை தயாரிப்புக்கான செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய அரச கொள்கையினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக நேரடியான மக்களின் கொள்ளலுடன் அதனை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கரு ஜயசூரிய**
**தலைவர்**
**நீதி நியாயமிக்க சமுதாயமொன்றுக்கான இயக்கம்**
**2022.09.21**